02

உ

குருபரன் துணை.

சுப்பிரமணியக்கடவுள் பேரில்

# சிவகாசி யந்தாதி.

இஃது

கழுகுமலை, ஸ்ரீமாந், அஷ்டாவதானம்

இராமசுவாமியாபிள்ளையவர்கள்

மாணாக்கர்,

S. நம்மாழ்வார் நாடாரவர்கள்

இயற்றியது.

சிவகாசி

ஸ்ரீமாந் அ. மு. சு சண்முகநாடார் அவர்கள் முதலிய

கனதனவான்கள் வேண்டுகோளின்படி,

விருதுபட்டி,

இராமலிங்கக் குருக்களவர்களது

சச்சிதானந்தம்பிரஸில்,

பதிப்பிக்கப்பெற்றது.

அணா 2

1913.

926:417
NB
180046

குருபரன் றுணை.

சுப்பிரமணியக்கடவுள் பேரில்

OFFICE OF THE REGISTRAR ... REGISTERED 28 JUN 19.. MADRAS

# சிவகாசி யந்தாதி.

இஃது

கழுகுமலை, ஸ்ரீமாந், அஷ்டாவதானம்

இராமசுவாமியாபிள்ளையவர்கள்

மாணுக்கர்,

S. நம்மாழ்வார்நாடாரவர்கள்

இயற்றியது.

சிவகாசி

ஸ்ரீமாந் அ. மு. சு சண்முகநாடார் அவர்கள் முதலிய

கனதனவான்கள் வேண்டுகோளின்படி;

விருதுபட்டி,

இராமலிங்கக் குருக்களவர்களது

சச்சிதானந்தம்பிரஸில்,

பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை —— அணு 2

1913

உ
சிவமயம்.

# சர்த்து கவிகள்.

கழுகுமலை, மகா-ா-ா-ஸ்ரீ

தலைக்காபுலவரவர்கள் குமாரர்,

## சங்கரக்குமாருப் புலவரவர்க ளியற்றிய

ஆசிரியவிருத்தம்.

திரிபுவனத்தாங்காங்குதேடினுங்கிட்டாதுசிவகாசியின்மா
திரிபுவனமலிநகரந்தாதிருகச்செவ்வேர்மேற்நிகழ்தல்செய்தான்
திரிபுவனயமகமதிற்றேர்ச்சியுறுங்கழுகுமலைச்சீனிமாலைந்
திரிபுவனச்சிரினருள்நம்மாழ்வார்க்கவிராஜசிங்கந்தானே.

## இந்நூலியற்றியவரின் ஆசிரியர் அஷ்டாவதானம் இராமசுவாமியா பிள்ளையவர்கள் தௌகித்திரன்

## ஸ்ரீமாந் சுப்பிரமணிய பிள்ளையவர்கள்

இயற்றியது

கங்கையணிவேணியரன்றிருநாமந்தலைக்கொண்டகாசிமேவுஞ்
செங்கைவடிவேலவன்மேற்சிவகாசியந்தாதித்தெரியல்வேய்ந்தா
னிங்கைகழுகாசலம்வாழெழிற்சீனிநாடனருளியநம்மாழ்வார்
நங்கையலர்மேலொடுநாமகளருளும்பெற்றுயர்ந்தநாவலோனே.

## சிவகாசி ஜெயமங்கள சண்முக விலாசம்

## ஸ்ரீமாந் கந்தசாமிக்கவிராயரவர்கள்

இயற்றியது

பல்வளஞ்சேருங்கனகநிதிமலிநன்னகரெனவேபாரோர்வாழ்த்தும்
வில்வவனக்ஷேத்திரமென்னுஞ் சிவகாசிப்பதியின்மேவுந்திவ்ய
நல்வரதனெனமைப்புரக்குஞ்சுப்ரமணியக்குகற்கிந்நாளந்தாதி
சொல்லினன்றென்னுவணிகிரிக்ஷத்ரியகுலநம்மாழ்வார்சுமுகன்மன்னே

## சிவகாசிமகா-ள-ஸ்ரீ தூ. சங்கண நாடாரவர்கள் குமாரர் சின்னக்கனி நாடாரவர்கள்

இயற்றியது

மாதரங்கஞ்சலநிதிசூழுலகிலுயர்சிவகாசிமகிழமேவு
நீதரங்கந்தனைச்சிறைசெய்நிமலனறுமுகப்பெருமானிசாசரப்போர்த்
தீதரங்கத்தெறுமயில்வேற்குகன்மிசையந்தாதியுளந்தெளியச்சொற்ற
பூதரங்கங்காதிபதிச்சீனியருள்நம்மாழ்வார்ப்புனிதன்மாதோ. [ன்

## விருதுபட்டி சச்சிதானந்தம் பிரஸ் ப்ரோப்ரைட்டர் ஸ்ரீமாந் இராமலிங்கக்குருக்களவர்களியற்றிய

வெண்பா.

இம்மாநிலத்தோர்கட் கின்பமிகவுண்டாக
நம்மாழ்வாரென்னுமுயர் நாவலவன் — செம்மான்ம
கள் கொழுநன்மீதுசிவ காசியந்தாதிப்பாவல்
தெள்ளுதமிழாலுரைத்தான் றேர்ந்து.

## நூல் வரலாறு.

ஆசிரிய விருத்தம்.

நடுத்தவறுதுலக்கியனடத்திய செண்பகக்குட்டிநரேந்திரன்றன்
கொடுத்தவரோதயனளகைக்குபேரனிகர் வாழ்வுடையகோமான் சீமா
அடுத்தவரையாதரிக்குமன்பினியவாபரணமாகப்பூண்டோ (ன்
னெடுத்தவராகனை நிகர்ப்போன் பாலப்பபூபதியாமெறின்மிக்கோனே

கொண்டகநேர்பத்தியினாற் குமரகுருபரனருட்சீர் குறித்துநாளுந்
தொண்டர்களு மதிசயிப்பத்தூய்மையொடு வாய்மையுமேதுலங்கும்வ
மெண்டகவுளோர்புகழுஞ்சிவகாசியந்தாதி யியம்புகென்று [ண்ண
விண்டகலாதுரைத்திடவேபுருஷார்த்தமிதுவென்யான்விளம்பினேனல்

உ

குருபரன் துணை.

# சிவகாசியந்தாதி.

## விநாயக வணக்கம்.

### வெண்பா.

படிமேற் சிவகாசி யந்தாதிப் பாவால்
வடிவே லுடையானை வாழ்த்தற் கடியேனு
மைங்கரந் நால்வா யகன்மும் மதமிருதாட்
டந்திமுக னைத்துதிசெய் தாம்.

### பிரார்த்தனை.

மாதவர்போற்றுஞ் சிவகாசியம்பதி வாழ்கடப்பந்
தாதவிழ்மாலைச் சிவசுப்பிரமண்ய சாமியையே
போதவணங்கிப் புகழ்வானுளத்திற் பொருந்தியன்னோன்
பாதவிசேடத்தி னாலோரந்தாதி பகருவனே.

## நூல். கலித்துறை.

தெய்வானைவள்ளி திருமணக்கோலமுந் தேவரெல்லா
முய்வானவுணரைக் காய்வடிவேற்கை யுதாரமுமூழ்
செய்வாதனையற நாபேறக நண்மலர்ச் சேவடியு
மெய்வானவர்சூழ் சிவகாசிக்கோவிலின் மேவியதே. (1)

மேவியநான்முகன் பான்மந்திரச்சீர் வினவியகா
லோவியம்போலுறச் சென்னியிற்குட்டி யுணர்த்தலெனப்
பாவியன்மூடந் தவிர்த்துமெஞ்ஞானம் பகர்ந்தருள்வாய்
தேவியர்காப்பன் சிவகாசிமேம சிவக்கொழுந்தே. (2)

சிவகாசியம்பதிப் பேர்வளம்போலிதிற் சேர்ந்தவருந்
தவகாசின்பொற்பொடு வாழ்குவரின்னோர் தலைவனெங்கோ
னவகாசியாதி நலந்தருஞ்சண்முக நாதனையோ
துவகாசியீசக்கு மாசாரியனென்று தொன்மறையே. (3)

மறையவன்மான்முர ணீங்கிட நீண்டிடு மாபதிக்கந்
நிறையவன்மூல் நிகழ்த்திப்நாவல னேர்மையிலாக்
கறையவன்சூரைக் கடிந்தெழுவேலவன் கர்த்தருக்கு
மிறையவனுகிச் சிவகாசியில்வீற் றிருந்தனனே. (4)

இருக்காதிநான்மறை பன்முறைவாழ்த்துதற் கெஞ்சிநின்றுந்
தருக்காதியான்முதன் மாந்தர்கள்புன்னெஞ் சகத்திலரு
வருக்காதிருந்தருள் செய்வேலவனே வணங்கியன்பு
பெருக்காதிருத்தனன்றோ சிவகாசியைப் பேணிச்சென்றே. (5)

சென்றிடுநாளுக் கிரங்கியிதுமுதற் செல்கிறநா
ளொன்றினுந்தீமை புரியாமனல்ல வொழுக்கமதி
னின்றினிதான வடிவேற்கையத்த னிமலபத
மொன்றிடுவாய்நெஞ்ச மேசிவகாசியி லுத்தமமே. (6)

உத்தமமேதிரு மேனியதாகு மொருவனெங்கோன்
சித்தமெஞ்ஞான சொருபன்சிவகுரு தேசிகனே
நித்தமுமாகிரு பாகரனுகி நிலைத்ததினுற்
பெத்தமொருவுஞ்சிவகாசிஞானம் பெருகிடுமே. (7)

பெருமையுடைய வடியேன்மடமை பிரிந்திடவே
அருமையுடையவென் னையாவுனக்கெனை யாட்படுத்தி
யொருமையுடைய வுபதேசஞான முரைத்தருள்வாய்
தருமமுடைய சிவகாசிவாழுமெய்ச் சண்முகனே. (8)

சண்முகத்தெய்வஞ் சடாக்ஷரத்தெய்வஞ் சதுர்மறையோ
னெண்முகத்தெய்வ மெனக்காக்குந்தெய்வ மியலிசைசேர்
பண்முகத்தெய்வம் பவந்தீர்க்குந்தெய்வம் பரகதியாள்
விண்முகத்தெய்வஞ் சிவகாசியம்பதி மெய்த்தெய்வமே. (9)

மெய்வாக்குடையவர் மேம்படுவார்பொய் விளம்பியவ
ரைவாய்மனத்தி னலைப்படுவாரென் றனுதினந்தேர்ந்
துய்வாய்மடநெஞ்ச மேசிவகாசி யுயர்வடிவேற்
கைவானவன்புகல் கட்டளையீதென்று காணுவையே. (10)

காணுதல்வேண்டுஞ் சிவகாசிவேன்முரு கையனைத்தோள்
பூணுதல்வேண்டுந் தமிழ்மாலைபாதாம் புயந்தொழுது
நாணுதல்வேண்டும் பிழைபொறுப்பாயென்று நாளினுமே
பேணுதல்வேண்டு மவன்பால்வரங்கள் பெறுவதற்கே. (11)

பெறுமிச்சரீர மெடுத்துப்புவியிற் பிறந்துமேநா
டொறுமிச்சையுற்றுத் தொலைத்தனைவாணாள் சுகமடைவாய்
வறுமைச்சிறுமையு மாறுநெஞ்சேநற்றெய் வானைவள்ளி
சிறுமித்துணைவன் சிவகாசிக்கந்தனைச் சேவைசெய்யே. (12)

சேவடிகண்டு தெரிசித்தன்முன்செயுந் தீமையறக்
காவடிகொண்டு கடன்தீர்த்தன்முன்னின்று கைகுவித்தன்
மூவடிதண்டு முராரிமருக முருகவென்று
தேவடியண்டல் சிவகாசிமாந்தர்கள் செய்தவமே. (13)

செய்யாள்கலையா டினம்வைகியசிவ காசியினீ
மெய்யாயொருதிரு மேனியருள்கொடு மேவியதா
லையாவரசே முருகாகுமரா வரிமருகா
துய்யாதுரையே தொழுமெளியேற்குச் சுகமுளதே. (14)

சுகமேவுமன்பர் சுரர்முனிவோர்க்குத் துயர்செயுந்தீ
யகமேவவுணரைச் செற்றிந்திரர்க்கு மரசுதந்தா
யிகமீதருண கிரிநாதரைச்சுக மென்றுகொண்டாய்
சகமீதினிய சிவகாசிவாழ்வுறுந் தற்பரனே. (15)

தற்பயந்தானுற் றுளஞ்சலிப்பேனைத் தரணியினல்
விற்பனனாக்கி மெலியாதுகாத்தருள் வேலையனே
சிற்பரனேகரு ணாகரனேசச்சி தானந்தமா
நிற்பவனேசிவ காசிப்பதியி னிறைந்தவனே. (16)

நிறைபுவிநீர்கனன் மாருதம்வான நிலவுகதி
ரிறையுயிராகியு மல்லவுமாகி யிலகுமெங்கள்
பிறையணிவேணிச் சிவனார்குமரன் பிரபலநற்
பொறைதவிராத சிவகாசியினிற் பொலிந்தனவே. (17)

பொலிவுறுமாறு முகம்பனிரெண்டு புயம்விழிகை
மலிவுறுகின்ற திருமேனிவேற்றி மயூரமிகு
வலிவுறுவேலா யுதமிருபாதமும் வாழ்த்துனரே
மெலிவுறுரென்று சிவகாசியன்பர் விளம்புவரே. (18)

விளங்கொண்டசூரனுக் கென்னென்னபுத்தி விளம்பியும்போர்க்
களங்கண்டடங்கிய காரணம்போலென் கறைமனதுக்
குளங்கண்டமட்டு முரைத்தும்வெளிசென் றுலாவியதாற்
றுளங்கலிலாதுறச் செய்சிவகாசியந் தூயவனே. (19)

தூயவரந்தருஞ் சுப்பிரமண்ய சுவாமிமுன்பு
போயவரங்கழல் போற்றித்துதித்துப் பொருந்துநெஞ்சே
தீயவினைப்பவந் தீர்ந்துபரகதி சேர்ந்திடுவாய்
ஞாயம்விளங்குஞ் சிவகாசியம்பதி நாளுஞ்சென்றே. (20)

சென்றவர்க்கெல்லாஞ் சிவகாசியிலருட் செய்யுமங்கே
நின்றவர்க்கானந்த வாழ்வையருளு நினைந்துருகு
கின்றவர்க்குச்சித்தி முத்தியுங்கூட்டுங் கிருபைக்கந்த
னென்றவர்க்கேவல்செய் நெஞ்சேபிறப்பி னிழுக்கறவே. (21)

இழைபார்க்குஞ்சூர்க்கு மிறையவருக்கு மிரவலர்க்கு
முழையார்க்கும்பார்க்கு முயர்வானவர்க்கு முளத்திினுக்குந்
தழையார்க்கும்யார்க்குந் தனிச்சிவகாசியிற் றங்கினர்க்கு
துழையார்க்குங்காக்கும் பனிரெண்டருட்கடை நோக்கினனே. (22)

நோக்குந்துவாதச மேகாதசர்தச நுண்ணவமர்
தூக்கும்புகழுங் கிரியாட்டசப்தசிந் துங்நடிக்கும்
பூக்குஞ்சிரஞ்சஷ்டி யஞ்சுதல்யானம் புயஞ்சதுர்த்ரி
யாக்குந்துதிகைப் பதஞ்சிவகாசியொ ராண்டவர்க்கே. (23)

ஆண்டனைபல்லா யிரங்கோடியண்டமு மாங்கெனைப்போற்
காண்டனைகொல்லோ கடைச்சிறிபேனையுங் காத்தருள்வாய்
பூண்டனைவேத்திய மாராதனஞ்செய்து போற்றிடுவோர்
பாண்டனைவேட்குஞ் சிவகாசிவேலவ பக்கமுற்றே. (24)

பக்கத்திருந்து படியார்களேசும் படிக்கடியேன்
றுக்கத்திருந்து துயரப்படாமற் சுகமருள்வாய்
சொக்கத்திருந்து சுகசிவகாசியிற் றென்றுதொட்டுப்
புக்கத்திருந்திழை வள்ளிசமேதவேற் புண்ணியனே. (25)

புண்ணியமெய்திடு நல்வினையாலந்தப் புண்ணியத்தாற்
கண்ணியங்கீர்த்தி புவிவாழ்வுமோக்ஷ கதியுமுண்டாந்
திண்ணியதீவினை பாவம்பவத்தாற் செகதுயரென்
றெண்ணியுளமே சிவகாசிவேலனை யேத்துவையே. (26)

ஏத்துங்கணேசனை யானனன்மால்பரை யென்றுதனைச்
சேத்திவணுறு முகங்காட்டிநின்றரு டேசிகரைத்
தோத்திரஞ்செய்மன மேசிவகாசியிற் றுன்பமெலா
நீத்தவராகுந் தினமவன்பொன்னடி நேர்தலினே. (27)

நேரார்புரஞ்செற்ற தேவன்முதியவ னேர்ந்துதொழும்
பாராரெவரையும் பார்க்குந்திறமை படாதெனவே
சீராரறுமுக னீராறுகண்கைத் திறத்துடனிவ்
வூரார்ந்தனன்சிவ் காசியென்றேத்து முயர்பதியே. (28)

உயர்வானகடு தழுவும்பொழில்சூ ழுறும்பணையிற்
கயல்வான்றுளியிற் கதித்தேறிமஞ்சு கலக்கியதாற்
புயன்மீன்மழையொ டிறங்கிக்கழனி பொலிவுபெறுஞ்
செயலார்வளங்கொள் சிவகாசிவேலனைச் சேவிநெஞ்சே. (29)

சேவற்கொடியோன் பரங்கிரிசெந்தூர் திருப்பழனி
தேவற்கரிய திருக்கழுக்குன்றந் திருத்தணிகை
காவற்குரிய திருவேரகநற் கழுகுமலை
பூவற்புதங்கொள் சிவகாசியினும் பொருந்தினனே. (30)

பொருந்தும்படிசிவ காசியந்தாதி புகன்றிடவே
அருந்தும்படியமு தாடைமெஞ்ஞான மருள்வதுடன்
றிருந்தும்படியடி யார்களைக்கண்டு தெரிசித்துநல்
விருந்தும்படியு முபசரிக்கச்செய்வை வேலவனே. (31)

வேலவனேசிவ காசிப்பதியினின் மேவுமனு
கூலவநேக குணதிசயந்திகழ் கொற்றவனே
மாலவனேர்மரு காமுருகாகுகா மான்மழுவோன்
பாலவனேவள்ளி சேர்ந்தருள்கூரும் பரிசுத்தனே. (32)

பரிமேலழகர் திருவள்ளுவர்முதற் பாவலரு
முரியநம்மாணிக்க வாசகரப்ப ருயர்சுந்தரர்
தெரிஞானசம்பந்த ராதியடியருஞ் சேர்ந்தினிது
பிரியாதிருப்பர் சிவகாசிக்கந்தனைப் பின்பற்றியே. (33)

பின்னுளெனும்பொன் னவளுமரியும் பிரமனுநாச்
சொன்னளும்பத்திர காளியுமாரியுந் தொன்றுதொட்டுப்
பன்னளுமேவல் புரியப்பெறுநம் பரன்பரையா
மன்னுள்குருபர னேசிவகாசியை யாண்டவனே. (34)

ஆண்டார்புவியென் றகமேற்கொளலறி வன்றுநெஞ்சே
மாண்டாரநேக மனிதரிவ்வையக மன்னெனப்பேர்
பூண்டார்மறையோர் புகழ்சிவகாசியைப் போந்தருளே
நீண்டாரறுமுகன் சேவடிவாழ்த்துவை நித்தியமே. (35)

நித்தியந்தேவ துதிசெய்குவார்க்கு நிரயமில்லை
முத்தியுஞ்சேர்வர் முனைவாட்படைச்சூர் முரணுடைத்தா
னெத்திசையும்புகழ் சண்முகத்தெய்வத்தை யேத்திநல்ல
புத்திசெய்வாய்நெஞ்ச மேசிவகாசிப் பதியிருந்தே. (36)

இருந்தவிவேகத்தைக் கொண்டிக்கவிக ளியம்புகின்றேன்
பொருந்தியணிந்துகொள் வாய்சிவகாசி புகுந்தருளே
திருந்தியசண்முகத் தேவேயுனது திருமுகச்சீ
ரருந்தியநெஞ்சுக்கெப் போதும்பெருகிடு மானந்தமே. (37)

ஆனந்தமீரு யுறும்பஞ்சகோசசீ வாத்துமத்தை
யேனந்திடாதமெஞ் ஞானத்துமமா மியல்பருள்வாய்
வானந்திகழுஞ் சிவகாசிக்கோயிலை மன்னியென்று
மோனந்தழையுங் குருபரசண்முக மூர்த்தியனே. (38)

சென்னை-600 008.
R26:417
NB

மூர்த்தியேகீர்த்தி முழுவதுந்தந்தெனை முன்புவந்து
பார்த்தியேலெந்தன் பவங்தொலைந்தின்பம் பலிக்குமய்யா
சீர்த்திமேலான சிவகாசிநாளுந் திகழ்குருவே
கார்த்திகேயாமுரு காகுமராகுகா கந்தப்பனே. (39)

கந்தாகடப்ப மலர்மாலைபூண்டருள் காங்கெயனா
னந்தா திருக்க வரந்தருவாயிந்த நானிலத்திற்
சிந்தாகுலந்தீர் சிவகாசியம்பதிச் செல்வரெல்லா
முந்தாள்பணியுந் தவத்தாற்கதிக்கு முரியவரே. (40)

உரியபராபரை யம்பிகைவாலை யுமாபதிக்கோ
ரரியதிருமக னாகியவேல னடியிணையைப்
பிரியமனமே சிவகாசியம்பதி பேணிநின்று
தெரியவருச்சனை செய்வாய்பரகதி சேருதற்கே. (41)

சேர்கயிலாச பதிக்கன்றுசோதிடஞ் செப்பியவா
நேர்கழுகாசல மீதடியேற்கு நிகழ்த்தியருள்
தேர்கவிராயர் புகழ்சிவகாசி திகழ்முருகா
வார்கழற்றுணைக மௌலிபெறுமயில் வாகனனே. (42)

வாகனமேமழை பெய்குவையென்றிடும் வாசவர்க்கு
மோகமதூர்வசி மேலோபுவியின் முகில்வரந்தாற்
பாகனமேது சிவகாசிவேலவன் பாற்சொனெஞ்சே
தாகமெலாநிறை வேறுமெமதெண்ணந் தான்முற்றுமே. (43)

முற்றுகுஞ்சற்குரு பாததியான முயல்வதினாற்
பெற்றுகுஞ்சீர்நலம் பேசரிதாமிது பெற்றிடன்மு
னெற்றுகுமோபுவி வாழ்க்கையென்றன்மன மேசுததுன்
சொற்றுகுமேசிவ காசிக்குமரா சுகமருளே. (44)

சுகஞானபண்டித னென்றுனைச்சொல்வது தோத்திரமோ
புகலானவார்த்தையோ ஞாயமதாலிப் புவியிலுள்ளோ
ரகமானதுமெலி யாதுறுநோயை யகற்றியருள்
பகலோனும்வாழ்த்துஞ சிவகாசியம்பிகை பாலகனே. (45)

பாலவனமெனன் மோகவெங்காடதிற் பாவையரைப்
போலமனமெனில் யானுய்வனோவந்தப் பூவையர்க்கோர்
வாலவயசுப் புருடனைப்போற்சி வகாசிவளர்
நீலமயிலுறுந் தேவேயெமக்குமுன் னின்றருளே. (46)

நின்றுணையல்லது பின்றுணையில்லை நிலமனைவி
பொன்றுணையென்ப தினைக்கொண்டுநன்றீ புரிந்திடலால்
வன்றுணைக்கொண்டாள் சிவகாசிவள்ளிதெய் வானையெனு
மின்றுணைப்பாக வடியேற்குநீமிக் குறுதுணையே. (47)

உறுதியடையா தவனுகினுநா னுனதடிக்கீ
ழிறுதியதனி லிருந்திடல்வேண்டி யியம்புதமிழ்ப்
பெறுதிமுழுதும் பிசகாமெனினும் பிழைதிருத்திப்
பெறுதியுடனணிந் தாள்சிவகாசிவேற் புண்ணியனே. (48)

புண்ணியமாவதி யாதென்றுணர்கிலன் புன்பவமே
பண்ணியுநின்று பரதவித்தேனையுன் பாலழைத்துக்
கெண்ணியமாகக் கிருபைசெய்தாண்டருள் கிட்டினர்க
ளுண்ணியமந்திர் சிவகாசிவேற்கை யுடையவனே. (49)

உடையவனீயுனக் கூழியனுனென வுண்மையிதற்
கிடையினில்வேற்றுமை யுண்டோபரகதி யெய்திடவே
தடையுளதெல்லாந் தவிர்த்தெனையாள்வை சதுர்மறையோ
ரடைவினிலேத்துஞ் சிவகாசிவாழு மறுமுகனே. (50)

அறுமுகனேவா அரிமருகாவா அடையலரைச்
செறுமுகனேவா சிவகாசியைவா சிவகுருவா
யுறுமுகனேவா வுடையவனேவா வுளமதனி
னறுமுகனேவா நகைமுகனேவா நலந்தரவே. (51)

நலந்தருவானை நனிமுகத்தானை நகையுளனைப்
பலந்தருவானைப் பகைதுளைத்தானைப் பதியவனைக்
குலந்தருவானைக் குறைதவிர்த்தானைக் குருபரனை
திலந்தருவானைச் சிவகாசித்தானை நினைமனமே. (52)

மனமேவெளிபோ யுலாவியதாலே வரும்பயமினன்
றினமோடியாடித் திரும்பியிளைத்தனை செல்லலின்றிக்
கனமேவியசிவ காசிப்பதிமுரு கையனை நீ
யினமாப்பணிந்துந் துதித்தேத்துதல்செய் யிருப்பிடத்தே. (53)

இருசத்தியிலொரு சத்திபிறலெய்து மின்பதுன்ப
மொருசத்திவஞ்சக தாரியுனைமுற் றெறித்தனளால்
வருசத்திகளொழி யச்சிவகாசி வளர்முருகன்
பெருசத்திவேலைத் துணைக்கொள்விவேகம் பிரிதலின்றே. (54)

பிரியாதிருந்து சுகானந்தமென்றும் பெறுவதற்குத்
தெரியாதுழன்ற சிறியனையாட்கொண்டு சேர்த்தருள்வாய்
மரியாதியோங்கி வளர்சிவகாசியின் மான்மியங்கள்
சரியாதுமெய்திட வைகிடும்வேலவுன் றுட்டுணையே. (55)

தாட்டாமரைமலர் சென்னியிற்சூடிநி தம்பணிய
மாட்டாதவரையிம் மானிலந்தாங்க வருந்துமென்பர்
தேட்டாளர்வாழச் சிவகாசிச்சண்முகத் தேவதின்மேற்
பாட்டானதாவிதை யாவருங்கொள்வர் பயனுறவே. (56)

பயமொன்றுமன்றியிப் பாவேன்செயலென்று பக்கலுளார்
நயமென்றுமின்றிய நாவினுரைத்தனர் நாணிலன்யான்
வயமொன்றுவேலா யுதத்தினென்பாவின் வழுக்களைவாய்
செயமென்றுமோங்குஞ் சிவகாசிவேற்கைச் சிவமணியே. (57)

சிவகுருவென்றுனைத் தேர்ந்தேதுதிக்குஞ் செயல்தனை
யவமிதுவென்றவர் கண்முன்சுகநீ யருள்புரிவாய்
தவமெனயாவருஞ் சாற்றிடத்தேவ தயாபரனே
உவமையிலாத வனேசிவகாசியை யுற்றவனே. (58)

உற்றபிழைபல செய்தேனெனினு முனைமனது
பற்றியதாலென் பவமறஞானம் பணித்தருள்செய்
நற்றவர்மேவுஞ் சிவகாசியம்பதி நாயகனே
வெற்றிமயூர வடிவேலயான்சொலும் விண்ணப்பமே. (59)

விண்ணயன்மாலை மயேசன்சதாசிவன் விந்துநாதம்
நண்ணருட்சத்தி சிவமாகியோங்கு நவவடிவா
மெண்ணருமூர்த்தி சிவகாசிவேல நீ யென்றுனையே
அண்ணிவணங்கி யடியன்புகுந்தே னடைக்கலமே. (60)

அடையோகமாயினுஞ் செய்தறியேன்சிவ மாகிடுமன்
புடையோகமெங்ஙன் பொருந்துவன் வேலவன்பொன்னடிக்கே
கடையோகமாகக் கருத்தைச்செலுத்தினன் கல்விசெல்வ
முடையோர்கள்வாழுஞ் சிவகாசிநண்ப ருவந்திடவே. (61)

உவமையிலாத சிவகாசிம்மயி லூர்தியையே
கவலையிலாமற் றுதித்தேனைநற் கழு காசலனுந்
தவமிகுமெந்தத் தலமூர்த்திகளுஞ் சதாமகிழ்ந்து
சிவகுருவாகித் திருவருட்செய்து சிறப்பிப்பரே. (62)

சிறப்புறும்வான்பொழிற் றேன்மழைபெய்தவண் செல்வழிபா
ணிறப்பிடுமோனிரை யாகவிரண்டு நிரந்தமுதாந்
துறப்பவர்க்கிவ்வளஞ் சூழ்சிவகாசிச் சுவாமியெண்ணுன்
கறப்பேறனைத்துந் தருவனெமதுள் ளவாவறவே. (63)

அவாதழீச்செய்வினை பல்லாக்குளோர்கன் றவிழ்த்திடினே
தவாதவிதமாய் தனைக்கண்டணைந்திடுந் தன்மையைப்போ
னிவாதவரைக்கண்டு நேர்ந்திடுமிந்த நிகழ்ச்சிகளுஞ்
சுவாதணிமார்பன் சிவகாசிவேலவன் றண்ணருளே. (64)

தண்ணாரமேவுந் தலைவர்க்குமேலாத் தமிபனுக்குக்
கண்ணாரமுதவ கடாக்ஷிப்பர்தன்சமு கந்தனையே
நண்ணாரவர்நா ணமனுளதாம்பன் னலம்விளையு
மண்ணாருமைச் சிவகாசிச்சுப்பிரமண்ணியனே. (65)

மண்ணினியல்பா மிடம்பொருளேவன் மகிமையொடு
நண்ணிடவேதமி யற்கருள்செய்குவை நானிலத்திற்
கண்ணியமுற்றுக் கதிபெறவேண்டுங் கருத்துடைய
புண்ணியர்வாழுஞ் சிவகாசிவேற்கரப் புங்கவனே. (66)

புங்கநத்தங்குழற் கட்கயன்மார்பிரு பொற்குமிழி
மங்கையெவன வலீயுட்படாமன் மனமுன்து
பங்கயப்பாதம் பணிந்திடச்செய்தருள் பாவலர்கள்
சங்கமுழங்குஞ் சிவகாசிமஞ்ஞைத்தயாபரனே. (67)

தயாளமிலாதவன் சோமனங்காரகன் சாமனுடன்
வியாழன்புகர்சனி நாகர்குளிகனின் வேதையற்றுக்
கியாதியுறவே கிருபைசெய்தாண்மறைக் கேள்விதிகழ்
நியாயமிகுஞ்சிவ காசிவைவேலுடை நின்மலனே. (68)

நின்னருட்பாதாம் புயமலராகிய நீழலுற்றுப்
பின்னடையாதுன் புகழ்சொலிநேசக்கும் பெற்றியரை
யின்னலுறாதரு ளின்பம்புகுத்தி யிலகிடச்செய்
கன்னன்மொழிவள்ளி யாய்சிவகாசியிற் காங்கெயனே. (69)

காங்கையுடனே புகுந்தேதுயர்படுங் காலமுனே
நாங்கைவிடேமென நெஞ்சமும்யானு நவின்றுனருட்
பாங்கையுணர்வோம் பரகதிசெல்லக்கண் பார்த்தருணற்
போங்கையுளசிவ காசியிராறு புயாசலனே. (70)

புயலாருங்காவினம் பூமாரிபெய்து பொலிவுமிகுஞ்
செயலாருஞ்செந்நெற் சிவகாசிபம்பதி சேர்ந்தினிய
கயலாருங்கண்ணெழிற் றேவிபர்பாங்குறை காங்கெயனே
மயலாருநெஞ்சமுன் றஞ்சமென்றேத்துவன் மானிலத்தே. (71)

மானலலாதெத் தலத்தினுமேலென மாதிடன்பேர்
நானலமாமுன் மொழிசிவகாசி நயந்திருந்தா
யேனலங்காவை கியவள்ளியின்பெயர்க் கிஷ்டமுற்றாய்
பானலங்கொள்சொற் சுவைதேர்ச்சிக்கின்புறும் பண்டிதனே. (72)

பண்டிதர்பாமரர் யாவர்க்குந்தோன்றம் படிசஷ்டியிற்
கண்டிதஞ்செய்தனை சூரனுக்கேலுன் கருணையெற்று
முண்டிதழையுஞ் சிவகாசியம்பதி யூரவர்க
ளண்டிதைபச்சி ரருமைகொலோதந்தை யய்யநிற்கே. (73)

அய்யேயரசே யடிகளேதேவே அரும்பொருளே
மெய்யேயுயிரே விவேகமேவேதமே வேதகமே
செய்யேறியவளங் கொள்சிவகாசியைச் சென்றிதுகா
றுய்யேனுயவருள் செய்வாய்தயாள முயர்குருவே. (74)

உயர்ந்தோர்புகழில் லறத்தினுநன்று யொழுகிற்கிலன்
பெயர்ந்தோர்துறவையும் பேணித்தவசு பெறுகிற்கிலன்
அயர்ந்தோரிலாத சிவகாசிமேவு மறுமுகனே
துயர்ந்தோரைக்காக்குந் தொழிலாயெனக்குந் துணைபுரியே. (75)

துணைமலர்ப்பாதந் தொழுதேதுதித்த றொறுந்தொறும்யா
னணைமலர்ப்பாவை புருடோத்தமனீ யருள்புரிவாய்
புணைமலநீத்தோர் புகழ்சிவகாசி புகுந்துகையி
னிணைமலர்வேலா யுதந்தாங்கியன்புற் றெழுந்தவனே. (76)

எழும்பனிரெண்டோர் சமேதனேநெஞ்ச மிளகியெய்துந்
தொழும்பனினைந்து கரங்கூப்பிக்கூப்பிநற் றொண்டுசெயுந்
தழும்பனிலாத மடையனெனினுஞ் சரணடைந்தே
னுழும்பனிலநலஞ் செய்சிவகாசி யுவந்துவந்தே. (77)

உவந்தேறுமூர்த்தி பதாகைவெஞ்சூர னுமைகரத்திற்
சிவந்தேறுவேலா யுதஞ்சிவகாசி தினமிருக்கை
பவந்தீர்ந்தொதுங்கிப் பணிந்தேத்துதல்செய் பவர்க்கினிது
தவந்தேரியநலஞ் சாயூக்ஷமோக்ஷந் தரும்பரற்கே. (78)

தராசுநிறைவர்த் தகரெலாம்வேண்டிடச் சண்முகப்பேர்
மிராசுவியற்றுஞ் சிவகாசிக்கோவிலின் வேலவனைப்
பராசுதல்செய்துற் பவந்தீர்ந்துகோபுர பந்தியிற்பொற்
கிராசயராலயஞ் சூழ்வாய்பரகதி கிட்டுநெஞ்சே. (79)

கிட்டியவூழாற் கவுரவநீங்கு கிருத்தியஞ்செய்
மட்டியானாலும் வருத்தப்படாதுனை வாழ்த்துதலாஞ்
செட்டியைந்தேனற் சிவகாசிச்சற்குரு தேசிகநீ
வட்டியீதல்போ லடியேற்குவேண்டு வனவருளே. (80)

93
12.65

வனமென்பதுவே சமட்டிவியட்டி மரமெனலா
சினமன்றியானுனக் கன்னிபமாமோ வெவர்களுநன்
மனமொன்றிவாழுஞ் சிவகாசிச்சுப்பிர மண்ணியனே
தினநன்றருள்புரிவாய் குடும்பவாழ்வு செயமுறவே. (81)

செய்வேலைதீமையா மென்னிலடியேன் செகமதனி
னுய்வேலையாதென் றுண நவன் சூக்க வுட லதனின்
மெய்வேலையநீ விளம்பிடல்வேண்டு மிகுந்ததிரைக்
கைவேலைபாவனைச் சீர்ச்சிவகாசிமெய்க் காவலனே. (82)

காவியத்தோடு கலைக்யானங்கற்றுக்கணித முங்கற்
றோவியைத்தேடு மறிவுநூல்கற்பதவ் வாத்துமநூற்
பாவியத்தோர்வர் பலராகிக்கல்வியின் பான்மைமிகுஞ்
சீவியத்தார்வை கியசிவகாசிமெய்த் தேசிகனே. (83)

தேசிகமாதிய காணம்பயின்று தெளிவுபெறு
மாசிரியப்பே றடைந்தோர்களுன்னை யனுதினமு
நேசியாநிற்குஞ் சிவகாசிவாழ்வுற்றெந் நேமியினும்
பூசிதைசெய்பவர்க் காங்காங்கருள்சிவ போதகனே. (84)

போதேறுபாதன் புகழேறியபுயன் புத்தெளிர்மேல்
வாதேறுசூரன் வதையேறியவேல் வடிவழகன்
[illegible]தேவிவாசச் சிவகாசியம்பதி சேர்ந்ததினன்
மாதேவரெல்லா மலர்மாரிபெய்திவண் வைகினரே. (85)

வைகலுநம்மைத் தடுத்தாளறுமுகன் வைகியதாற்
செய்கிளர்செந்நெற் சிறப்பெய்திபூதியச் செட்டுடனே
மெய்கொடனஞ்சேர் சிவகாசியம்பதி மேன்மைபுகன்
றுய்குவைநெஞ்சே யிருமைக்குநன்மை யுறுமினிதே. (86)

இனிபாதபுன்கவி யாலிவ்வந்தாதி யியம்பினன்யான்
செனிபாதவர்வாழ் சிவபதஞ்சேர்ந்திடச் செய்குவையோ
நினையாதவர்சென் னிரயத்திற்செல்ல நிகழ்த்துவையோ
எனையாதரிக்குஞ் சிவகாசிவேன்முரு கேச்சுரனே. (87)

ஈசுரநாமத்தி யானஞ்செய்வீர்கல்வி யில்லையெனிற்
பூசுரர்க்காயினும் போசனஞ்செய்வீர் பொருளில்லையே
னேசுரம்யாவ ரிடத்தும்வைப்பீர்நன் னெறிக்கிதுவோர்
பாசுரம்பாரீர் சிவகாசிவேற்கைப் பரனமக்கே. (88)

பரம்பரையாகச் சிவகாசியம்பதிப் பக்தருக்கு
வரம்பலகோடி யருள்செயும்வேலனை வாழ்த்தியொரு
தரம்புகல்வாயெனிற் சஞ்சலநீங்குந் தகுதமிகு
நிரம்பியவாழ்வுண்டு முத்தியுஞ்சித்திக்கு நெஞ்சகமே. (89)

நெஞ்சேபிறவித் துயரந்தவிர்ந்திடு நீயெதுக்கு
மஞ்சேலறுமுக னேழைக்குமெட்டுவ னாதலினாற்
பஞ்சேரியகழற் பாவையர்நாப்பண் பதிந்திருக்குஞ்
செஞ்சேவடியைச் சிவகாசிசென்று தெரிசிப்பையே. (90)

தெரிசித்தவர்கள் சிவலோகம்வாழ்வர் திகழ்பதத்தி
லருசித்தவர்க ளவனடிசென் றுய்வ ராலுனக்கு
வருசித்தமெப்படி யோவப்படிக்குய்கு வாய்மனமே
உருசித்தமெய்ச்சிவ காசிவைவேற்கை யொருவனையே. (91)

ஒருவனிருகரங் கூப்பி முக்குற்ற மொழிந்தியம்பற்
கருநான்மறையாற் றுதித்தஞ்சலிசெய்துள் ளாறியெழுந்
திருந்தாலெட்டுநவக் கோணிலைபத்த ரியம்பிடுவார்
திருவந்துறைசிவ காசிக்குருபரன் சீரடியே. (92)

சீராகும்வாழ்க்கைத் திருநலமோங்கிச் சிறப்புறுநற்
பேராகுமின்னம் பிறவாநெறிதரும் பேரின்பமாம்
நேராகும்வேலா யுதப்பெருமானின் புகழ்நிகழ்த்தும்
பாராகுலந்தீர் சிவகாசியம்பதிப் பாக்கியைந்தே. (93)

பாக்கியத்தாலும் பவுசாலுமேன்மை பரவிடுநாட்
சிக்கிலைபந்தாலென்ன செய்வைநெஞ்சேநற் சிவன்குமரன்
காக்கியல்வேற்கை திகழ்சிவகாசிக் கடவுளெமை
நோக்கியதாகிடிற் செல்வமெல்லாமெய்து நோயில்லையே. (94)

இல்லையென்றேற்பார்க் கிலையென்றிடாதெது மீகுவரே
லல்லையிலாம லநேகசுகத்தை யனுபவிப்பர்
சொல்லைநழுவாச் சிவகாசிமேவிய சுப்ரமண்ய
னெல்லையிலாத கொடையாளர்முன்புவந் தெய்துவனே. (95)

எய்துமுதுமை யிளமையகலு மெனிலிதற்குட்
செய்துங்குமரக் கடவுட்கெனக்ஷத் திரியர்தனம்
பெய்துமுடித்த பணியொடிம்மாலை பிறங்கிடக்கங்
கைதுலக்கிச்சிவ காசியந்தாதி கழறினனே. (96)

களித்தனன்யானிக் கருணாகரமுரு கையனுக்கே
யளித்தனன்பாதகா ளரிக்கையதாநெஞ் சகமதனை
விளித்தனன்மாமறை கூறருநாமங்கள விண்ணதனைக்
குளித்தனவானோர் சிவகாசிவந்துகை கூப்பினரே. (97)

கூப்பிள்ளைகளின் குறைதீர்க்கவேண்டிக் குவலயத்தின்
மாப்பிள்ளைமாப்பிள்ளை யாகச்சிவனுக்கு மாப்பிள்ளையாத்
தாப்பிள்ளையேனுந் தனிப்பிள்ளையாகிய சண்முகனே
பூப்பிள்ளைக்கோர்நில தச்சவகாசியிற் போந்தனையே. (98)

போந்திடல்வேண்டுந் திருப்புகழ்வாசனை புன்மையெலா
மாந்திடல்வேண்டு மறநெறியுய்த்திடி யேனையுன்கை
யேந்திடல்வேண்டுஞ் சமுசாரபந்த மெனுஞ்சலத்தை
நீந்திடல்வேண்டுஞ் சிவகாசிவேலையா நின்பரமே. (99)

நின்னையுள்ளாக்கு நிலம்பாதலம்விண்ணை நேர்புரக்குந்
தன்னையுந்தேக்குஞ் சிவசுப்பிரமண்ய சாமிகண்டாய்
பின்னையெவர்க்குமிப் பேரியல்வாய்ந்ததோ பெட்புமிகுந்
தென்னைவனஞ்சூழ் சிவகாசியம்பதித் தெய்வநெஞ்சே. (100)

நூற்பயன்,

வெண்பா.

வாசிப்போர் கேட்போர் மனநஞ்செய் வோரறிந்து
பூசிப்போர் தேர்ந்து பொருட்சொல்வோர்—பேசும்
இவர்களுக் கெல்லா மினிதுசுக மெய்துஞ்
சிவகாசி யந்தாதிச் சீர். (101)

சீர்பிரமதீக்ஷசம்வற்சரம்வைகாசி
தேதியிருபதுநான்கினிற்
திகழ்சுக்ரவாரசுக்கிலதுதிகையீசனுட்
சித்தயோகசுபதினமதிற்
பேர்பிரம காசிபம்பதிக்குமரனந்தாதி
பிரான்சன்னிதானமுன்னர்
பெரியமுதலாளியாஞசண்முகக்குரிசிலொடு
பிரபலப்பாலப்பவேள்
சேர்பிரமபோகன்பொனுச்சாமிஸ்கூல்வினுச்
செண்பகக்குட்டிவள்ளல்
செய்தொழிற்செயன்மகாலிங்கபூபதிநகர்ச்
சேர்மனுயர்தங்கசாமி
ஏர்பிரமகல்வியுறுமாறுமுகமால்புவியு
ளிசைநாக்ஷியப்பதீர
னினந்தருமகர்த்தனருணசலாதியரவையி
லினிதரங்கேற்றியதுவே. (102)

## பதினறடி ஆசிரிய விருத்தம்.

எண்டிசையுளோர்பரவு மண்டருலகாதிபர்க ளொத்தினமு மயில்வாகனு
இங்கங்கெனுதபடி யெங்குநிறை பூரண வினியதயவேமிகுந்த
ஈசனருள்புத்திரா நேசரிருதயகமலமென்றுமே சொந்தமான
இல்லமெனவாழ்பவா வல்லமெல்லா நீக்குமிறைவனேமறையவன்றன்

பண்டுன் வினவிற்கு விடைதராப்பான்மையாற்பயன்சொலிச்சிறையிலி
பார்த்திபாசீர்த்திசேர்பராக்கிரமனேகுறப்பைந்தொடிக்கன்பனுன(ட்ட
பங்கனேசெங்கைபொரு பன்னிரண்டுடையவா பாற்கடலிலேதுயின்ற
பச்சைமாலிச்சைகொள்மருகனேமுருகனேபலகாலும்ரக்ஷியென்று

தொண்டராய்ப்பணியவேவரங்கொடுத்தாண்டருள்சுப்பையாகந்தநாதா
சுந்தரமலிந்தகவிமாலையணிமார்பனேசூரபத்மனைச்செயித்த
துங்கனேமங்களச்சிவகாசியம்பதிச்சுவாமியே வாமிபுதல்வா
சுத்தசட்சமயதேவானவறுமுகவனேசுகம்வேண்டுமென்றுநின்னை

அண்டினேன்றெண்டனையாட்கொண்டுதொல்லையையகற்றிநீடூழியான
ஆயுளுஞ்செயிழைபனுகூலமும் புத்ரராக்கமுங்கல்வியழகும் [ன்
அடையலர்திடங்கெடச் செயம்பனுந்தன்மையுமவாவறத்தந்தெமக்கு
அடியிணையைமறவாதபடிபிரமகதிமோக்ஷமதனையுமுவந்தருள்வையே.

சிவகாசியந்தாதி முற்றுப்பெற்றது.